# தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் - 2018

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், பொழிப்புடனான முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கமைய, எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர, தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் விதத்தில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களினது கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனோடு தொடர்புடைய தரப்பினரதும் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தை கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடை நிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய, தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் நிறுவனம் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் நடைமுறை தொடர்பான பொறுப்பு குறிப்பிட்ட தரப்பினரதாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய அறிக்கையை வழங்குவது என்பது எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான சான்றுறுதிப்படுத்தலாக இருப்பினும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் போதியளவு தவறான கூற்றுக்களை வெளிப்படுத்துவதற்கான உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடும். இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர் மேற்கொள்ளும் பொருளாதாரத் தீர்மானங்களுக்கு தாக்கம் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில் துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும்போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளை இனங்காணாமையால் ஏற்படும் தாக்கம் பிரபலமானதாகும். தவறான கூட்டிணைவு,போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டைப் புறக்கணித்தல் என்பன மோசடி ஏற்படக் காரணமாகலாம்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டை அறிந்திருந்தபோதும் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வத் தன்மைக்கான அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவதற்குக் கருதவில்லை.

- முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் உசிதமான தன்மையையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையையும் மதிப்பாய்வு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமை காரணமாக நிறுவனம் தொடர்ந்தியங்குவது தொடர்பாக போதியளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது தொடர்பாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றினடிப்படையில் கணக்கீடு சம்பந்தமான நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பான அடிப்படையைப் பயன்படுத்தலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் எண்ணுவதாயின் நிதிக்கூற்றுக்களிலுள்ள அத்தகைய வெளிப்படுத்தல்களுடன் எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்த

வேண்டும். அந்த வெளிப்படுத்தல் போதுமானதாக இல்லாதிருப்பின் எனது அபிப்பிராயம் மாற்றத்திற்குள்ளாக வேண்டும். எனது முடிவானது கணக்காய்வு அறிக்கைத் தினம் வரையான கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையிலானவை. எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள், அல்லது நிலைமை காரணமாக தொடர்ந்தியங்கும் தன்மை முடிவுக்கு வரலாம்.

- வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் உசிதமானவாறும் நியாயமானவாறும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

இயலுமானவரை மற்றும் தேவையான எச் சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு பரப்பெல்லையும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்குமிடத்து, நிறுவகத்தின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்யக்கூடியவாறு அதன் ஒழுங்கமைப்பு,முறைமை, நடைமுறைகள்,ஏடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமை, நடைமுறைகள்,ஏடுகள்,அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகப் பேணப்பட்டுள்ளனவா என்றும்,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டம் அல்லது தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் சபையால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாட்டிற்கு இணங்க தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் செயற்பட்டுள்ளதா என்றும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்றும்,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனுடனும் ஆக்கபூர்வமாகவும் கால வரம்பிற்குள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா என்றும்,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்களது முகாமைத்துவத்தினை பொதுவான மற்றும் குறிப்பிடப்பட்ட அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், தொடர்புடைய அறிக்கையிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கீட்டு நடவடிக்கைகளைப் பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களில் பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களித்தகைமையை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் கணக்கிணக்கம் செய்தல் மற்றும் வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்தல் தொடர்பான நியாயமான உறுதிப்பாட்டை பெறுவதற்குப் போதிய“சிறந்த முறையில் திட்டமிடப்பட்ட” உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையை நிறுவனம் பேணுதல் அவசியமாகும்.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ஓய்வூதியப் பணிக்கொடைக் கொடுப்பனவிற்கு ரூபா 11.01 மில்லியன் நிதியேற்பாடு செய்ய வேண்டியபோதும், அத்தினத்தில் உள்ளவாறு ஏற்பாடு செய்யப்பட்ட நிதி ரூபா 8.39 மில்லியன் மாத்திரமே. | நாட்குறிப்பை இடுகையில் குறித்த தவறு ஏற்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும்போது திருத்தம் மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறிருந்த பொறுப்புகள் கணக்கிலிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் பிழையற்ற தன்மை உறுதி செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | புதிய அலுவலகக் கட்டிட நிர்மாண வேலை சம்பந்தமாக நிறுத்தி வைத்த ரூபா 8.09 மில்லியன் ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்ட தொகையில் கழித்துக் காட்டப்பட்டமையால் நடைபெறும் வேலைகளது பெறுமதி அதேயளவு குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டில் இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கையில் திருத்தம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு சான்றுறுதிப்படுத்தப்பட்ட வேலைகளது பெறுமதி நடைபெறும் வேலையாகக் கணக்கிலிடப்படுவது அவசியம் ஆகும். |
| (இ) | ஆராய்ச்சி நிறுவனத்தின் மாவட்ட அலுவலகங்கள் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைத்த ரூபா 1.01 மில்லியன் இனங்காணப்படாத பெறுவனவின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | நிறுவனம் வங்கி வைப்புப் பத்திரத்தில் குறிப்பிடும் விண்ணப்ப இலக்கத்தை பணத்தை வைப்பிலிடும் சந்தர்ப்பத்தில் உள்ளடக்குமாறு வங்கிக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளபோதும், அவ்வாறு செய்யத் தவறிய சந்தர்ப்பங்களில் வைப்பிலிடுபவர்களை இனங்கண்டு கொள்ள முடியாது போவதால் இந்நிலைமை உருவாகியுள்ளது. | ஆராய்ச்சி நிறுவனத்தின் வங்கிக் கணக்குகளில் நேரடியாகவே வைப்பிலிடப்படுபவற்றை இனங்காண்பதற்கான விதிமுறைகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு வாடிக்கையாளர் களிடமிருந்து | 2019 ஆம் ஆண்டில் இத்தொகையை வருமானத்தில் உள்ளடக்குவதற்கான | கொடுப்பனவு மீதிகளைத் தீர்வு செய்வதற்கான விதிமுறைகள் |

| | | |
|---|---|---|
| கூடுதலாகப் பெறுவனவாகக் காண்பிக்கப்பட்ட ரூபா 1.43 மில்லியன் மீதியைத் தீர்வு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஓராண்டிற்கு மேலாக தீர்வு செய்யப்படாதுள்ள ரூபா 1.23 மில்லியன் கூட்டுத் தொகை மீதியும் அதில் உள்ளடங்கியிருந்தது. | நடவடிக்கை எடுக்கப்படும். | தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.5.3 பொருத்தமற்ற மதிப்பாய்வு அல்லது மதிப்பீடு மேற்கொள்ளப்படுதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கடுகண்ணாவை தமிழ் வித்தியாலய சுற்றாடலில் மண்சரிவு ஏற்படுவதற்கான அபாயத்தைக் குறைக்கும் செயற்திட்டத்திற்கான பொறியியல் மதிப்பீடு ரூபா 25.23 மில்லியனாகும். எனினும், ரூபா 29.50 மில்லியன் பெறுமதியிலான ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. பொறியியல் மதிப்பீட்டில் நிலவிய குறைபாடுகள் காரணமாக மதிப்பிடப்பட்ட பெறுமதியை விட 17 சதவீத அதிகரிப்பில் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. | கடுகண்ணாவை தமிழ் வித்தியாலய வேலைத் தளத்தில் நிலவிய நடைமுறை வசதியின்மை காரணமாக சகல ஒப்பந்தகாரர்களும் ஆரம்பச் செலவினம், செயற்திட்டச் சுற்றாடல் செலவினம், கொங்கிறீட் வேலைகள் என்பவற்றிற்கு பொறியியல் மதிப்பீட்டிற்கு இணையாக கூடிய பொறுமதியிலான கூறு விலைகளைச் சமர்ப்பித்திருந்தனர். குறித்த நடைமுறை நிலைமைகளைக் கருத்திற்கொண்டு பொருட் கொள்வனவு வழிகாட்டலுக்கமைய கேள்விகள் மதிப்பாய்வு செய்யப்பட்டு குறைந்த விலைக் கூறு விலையாளருக்கு ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சரியான மதிப்பீட்டைத் தயாரிப்பதன் மூலம் இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்யலாம். |
| (ஆ) நீர்கொழும்பு கொச்சிக்கடை தோப்புவ பாலத்திற்கருகே கடலரிப்பைத் தவிர்ப்பதற்கான செயற்திட்டம் ஒன்றை அமுலாக்குவதன் பொருட்டு பொறியியல் திட்டத்தை | செயற்திட்டத்தை நடாத்துவதற்குத் தேவையான தொழில்சார் துறைப் பதவியணியினரது சம்பள அளவுத் திட்டமானது ஏனைய வெளிவாரிச் | அரச செயற்திட்டத்திற்கு மதியுரைச் சேவையை வழங்குகையில் நியாயமான இலாப |

| | | | |
|---|---|---|---|
| | தயாரிப்பதற்கு ஆராய்ச்சி நிறுவனத்தின் பூகற்பவியல் தொழில்நுட்ப மற்றும் பொறியியல் பிரிவு பொறுப்பேற்றிருந்த மதியுரைப் பணிக்கு அறவிட்டிருந்த தொகை ரூபா 10.96 மில்லியனாகும். எனினும், அதற்கென உள்ளவாறு ஏற்பட்ட செலவினம் ரூபா 6.85 மில்லியனாகும். அதற்கமைய, மதிப்பீட்டுச் செலவினத்தை அதிகரித்துக் காட்டியதன் மூலம் திறைசேரி நிதியேற்பாட்டின் அடிப்படையில் ரூபா 4.12 மில்லியன் இலாப வரம்பு ஏற்பட்டமை அவதானிக்கப்பட்டது. | செயற்திட்டங்களையும் மதியுரைச் சேவைகளையும் வழங்குவதற்கு தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் இதுவரை கடைப்பிடித்த திட்டமாகும். கணக்காய்வில் குறிப்பிடப்பட்டவாறு மதியுரைச் சேவைக் கட்டணம் கணிப்பிடப்பட்டு குறித்த சீராக்கல் 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவிக்கின்றோம். | வரம்பைக் கடைப்பிடிப்பதைக் கருத்திற் கொள்ள வேண்டும். |
| (இ) | 2018 ஆம் ஆண்டில் தானாக இயங்கும் 30 மழை மானிகளை நிறுவுவதற்கு ரூபா 31 மில்லியன் திறைசேரி நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது எனினும், அதற்கென ஆராய்ச்சி நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட பொறியியல் மதிப்பீடு ரூபா 17.3 மில்லியன் மாத்திரமே. எவ்வாறாயினும், மழை மானிகளை நிறுவுவதற்கு வழங்கப்பட்ட ஒப்பந்தப் பெறுமதி ரூபா 12.85 மில்லியனாகும். முறையான ஆய்வின்றி நிதியேற்பாட்டை மேற்கொள்ளுதல் மற்றும் மதிப்பீட்டைத் தயாரித்தல் காரணமாக ரூபா 18.15 மில்லியன் கூடுதலாக நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது. 2018டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் குறித்த மழை மானிகளை நிறுவ வேண்டிய இடம் இனங்காணப் பட்டிருக்கவில்லை. | 2016 ஆம் ஆண்டிற்கு முன்னர் தானாக இயங்கும் மழை மானியை உற்பத்தி செய்து பொருத்துவதற்கு ஒரு நிறுவனம் மாத்திரமே முன்வந்திருந்த போதிலும், அதன் பின்னர் இது தொடர்பான தொழில்நுட்பம் அதிகரித்தமையால் இந்த உபகரண உற்பத்தியாளர்களது எண்ணிக்கையும் அதிகரித்து அதன் காரணமாக போட்டியுடனான கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இந்நிலைமை காரணமாக இந்த உபகரணங்களது விலை குறிப்பிடத்தக்க வேறுபாடுகளுக்குள்ளாகி விலை குறைவடையக் காரணமாக அமைந்தது. இச்செயற்திட்டத்திற்கெனப் பெறப்பட்ட எஞ்சிய நிதியைப் பயன்படுத்தி 15 மழை மானிகளை நிறுவுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் இதுவரை சகல மழை மானிகளுமே பொருத்தப்பட்டு முடிவடைந்துள்ளன. | மதிப்பீட்டைத் தயாரிக்கும்போது அச்சமயம் நிலவும் சுற்றாடல் சாதனங்களை நியாயமாக மதிப்பாய்வு செய்வதன் மூலம் வினைத்திறனுடன் நிதியைப் பயன்படுத்தலாம். |

### 1.5.4 கணக்காய்விற்கான ஆவணச் சான்றின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| மண்சரிவு அபாயத்தைக் குறைக்கும் செயற்திட்டங்களை அமுலாக்குவதன் பொருட்டு ஏற்பாடு செய்யப்பட்ட நிதியானது வேறு பணிகளுக்குப் பயன்படுத்தப்படுதல். | ரூபா 16.81 மில்லியன் | திறைசேரியின் அங்கீகாரம் | குறித்தி நிதி மாற்றத்திற்கான திறைசேரியின் அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது. இது தொடர்பாக திறைசேரியிடம் வினவப்பட்டுள்ளது. | ஏற்பாடு செய்யப்பட்ட நிதியைப் பயன்படுத்துவதற்கு முன்னர் அங்கீகாரத்தைப் பெறுதல் அவசியமாகும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டியன

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | புஸ்ஸல நவோத்யா வித்தியாலயத்திலும் பதுளை வெவேகம மருத்துவ மனைச் சுற்றாடலிலும் ஏற்பட்ட மண்சரிவைக் குறைப்பதற்கான செயற்திட்டம் சம்பந்தமான நிர்மாண வேலை ஒப்பந்தத்தைப் பெற்ற ஒப்பந்தகாரர்கள் 2016 ஏப்ரல் மாதமளவில் ஒப்பந்தத்தைக் கைவிட்டிருந்தனர். ஒப்பந்தகாரர்கள் பெற்றிருந்த முற்பணத்தில் தீர்வு செய்யப்படாதிருந்த ரூபா 1.66 மில்லியனைத் திருப்பிப் பெறுவதற்கும் அச்செயற்திட்டங்களது செயலாற்றல் பிணைமுறியான ரூபா 1.57 மில்லியனை அறவிடுவதற்குமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. | இவ்விரு செயற்திட்டங்களையும் ஒப்பந்தக்காரர்கள் நிறுத்திய சந்தர்ப்பத்தில் முற்பணத்திற்கு நிகரான வேலை முடிவடைந்திருந்தது. மேலும், இதன் பொருட்டு செயலாற்றல் பிணை முறியை அறவிடுதல் தொடர்பான காப்புறுதிக் கம்பனிக்குப் பல சந்தர்ப்பங்களில் எழுத்து மூல வேண்டுகோள் விடுக்கப்பட்டபோதும், கம்பனி பணத்தை விடுவிக்கவில்லை. இதனையடுத்து காப்புறுதிக் கம்பனிகள் மூலம் பெறக்கூடிய செயலாற்றல் பிணை முறியைப் பெறுவது நிறுத்தப்பட்டுள்ளது. | ஒப்பந்த மேற்பார்வையை நிரந்தரமாகவும் முறையாகவும் மேற்கொள்வதற்கும் சுற்றறிக்கை அறிவுறுத்துரைகளின் படி செயலாற்றல் பிணை முறியை வணிக வங்கிகளின் மூலம் மாத்திரமே பெறுவதற்குமான நடவடிக்கை எடுத்தல் அவசியம். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2009 ஆம் ஆண்டு தொடக்கம் நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களில் நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து ரூபா 5.92 மில்லியன் மீதி பெறப்பட வேண்டியுள்ளதாகத் தொடர்சியாகக் காட்டப்பட்டிருந்தபோதும், அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் கொடுப்பனவு செய்ய வேண்டிய மீதியாக அது காட்டப்பட்டிராமை அவதானிக்கப்பட்டதால் அதனை அறவிடுவது நிச்சயமற்றதாகியிருந்தது. | இத் தொகையை அறிவடுவதற்கு விளையாட்டுத்துறை அமைச்சுக்கும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கும் பொதுத் திறைசேரிக்கும் அமைச்சின் செயலாளரால் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது. இது தொடர்பாகப பல கலந்துரையாடல்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தொடர்ந்து இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இதுவரை அதனை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்வதற்கான அவகாசம் கிடைக்கவில்லை. | அரச நிறுவனமாவதால் இணக்கம் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

**1.6.2 முற்பணம்**

------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015-2017 காலப்பகுதியின்போது ஆராய்ச்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட மண்சரிவு அபாயத்தைக் குறைப்பதற்கான 22 நிர்மாண வேலை ஒப்பந்த வேலைகள் நிறவடைந்திருந்தன. எனினும், ஒப்பந்தகாரருக்கு முற்பணமாக வழங்கப்பட்ட ரூபா 75.43 மில்லியன் நடப்பாண்டு இறுதியளவிலும் தீர்வு செய்யப்படாதிருந்தது. | 2015 தொடக்கம் 2017 வரை வழங்கப்பட்ட சகல ஒப்பந்தங்களும் தற்போது நிறைவடைந்துள்ளன. ஆகவே, 2019 ஆம் ஆண்டில் சகல முற்பணமும் தீர்வு செய்யப்படுவதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. | இடைக்காலக் கொடுப்பனவுகளின்போது குறித்த முற்பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்காமையால் இந்த அபாயம் ஏற்பட்டுள்ளது. அதற்கமைய, முற்பணத்தை அறிவிடாமைக்குப் பொறுப்பான தரப்பினரை இனங்கண்டு அதனால் ஏற்படக்கூடிய நட்டத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| நிதிப்பிரமாணம் 835(2)(இ) | பத்து ஆராய்ச்சி நிறுவன மாவட்ட அலுவல்களை நடாத்துவதற்கு வாடகை அடிப்படையில் பெறப்பட்ட கட்டிடங்களுக்கு ரூபா 9.39 மில்லியன் மீளாய்வாண்டின்போது செலுத்தப்பட்டிருந்தது. அதன் பொருட்டு பிரதான விலை மதிப்பீட்டாளரது மதிப்பீட்டு அறிக்கை பெறப்படவில்லை. | எதிர்காலத்தில் வாடகைக்குப் பெறப்படும் கட்டிடங்களுக்கு 835(2)(இ) நிதிப்பிரமாணத்தின்படி பிரதான விலை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பிரதான விலை மதிப்பீட்டாளரது மதிப்பீடு பெறப்படுவதற்கும் அதற்கமைய கட்டிட வாடகை மீளாய்வு செய்யப்படுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் அவசியம் ஆகும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டினது செயற்பாட்டுப் பெறுபேறு ரூபா 63.68 மில்லியன் ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 43.83 மில்லியனாகும். அதற்கமைய, நிதிப் பெறுபேற்றில் ரூபா 19.85 மில்லியன் அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. நிலையான வைப்பு வட்டி அதிகரிப்பு இதற்கான முக்கிய காரணமாகும்.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களது போக்கு தொடர்பான பகுப்பாய்வு

**2.2.1** ஆராய்ச்சி நிறுவனத்தின் ஒவ்வொரு பிரிவின் பிரகாரமுமான நிதிப் பெறுபேறு முன்னைய ஆண்டிலானவற்றுடன் ஒப்பிடப்பட்டுக் கீழே தரப்படுகின்றது.

| பிரிவு | டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 2017 செயற்பாட்டு மிகை | 2018 செயற்பாட்டு மிகை | செயற்பாட்டுப் பெறுபேற்றின் அதிகரிப்பு / (குறைவு) | சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| சுற்றாடல் ஆய்வும் சேவைகளும் | 12,947,606 | 15,047,412 | 2,099,806 | 16 |
| புவிவியல் தொழில்நுட்பமும் பொறியியலும் | 1,149,561 | 8,894,222 | 7,744,661 | 674 |
| செயற்திட்ட முகாமைத்தும் | 3,322,257 | 2,331,376 | (990,881) | (30) |

| | | | | |
|---|---|---|---|---|
| மண்சரிவு ஆராய்ச்சி மற்றும் அபாய முகாமைத்துவம் | 11,746,814 | 348,249 | (11,398,565) | (97) |
| மனிதவள குடியிருப்பு திட்டமிடலும் ஆராய்ச்சியும் | 2,879,675 | 11,198,228 | 8,318,553 | 289 |
| கட்டிடப் பொருள் ஆராய்ச்சி | 9,697,689 | 6,140,146 | (3,557,543) | (37) |

மேற்படி தகவல்களின் பிரகாரம், கட்டிடப் பொருள் ஆராய்ச்சிப் பிரிவைத் தவிர, சுய நிதியளிப்பு நடவடிக்கைகளின் மூலம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பிரிவுகளே நிதிப் பெறுபேற்றில் மிகையைப் பிரதிபலிக்கும் ஏனைய பிரிவுகளாகும். பொதுத் திறைசேரியினது நிதியேற்பாட்டின் மூலம் செயற்திட்டங்களை அமுலாக்கும் பிரிவுகள் வருமானத்திலும் கூடிய செலவினத்திற்குள்ளாகியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஆராய்ச்சி நிறுவனத்திற்கு சட்டபூர்வ அந்தஸ்தை வழங்குவதற்கான சட்டமூலம் ஒன்றைத் தயாரிப்பதற்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைக் குறிப்பிற்கு 2010 யூன் 02 ஆந் திகதி அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கமையத் தயாரிக்கப்பட்ட சட்டமூலத்தின் வரைவு 2012 செப்டம்பர் 10 ஆந் திகதி சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது எவ்வாறாயினும், குறித்த சட்டமூலம் 2018 டிசெம்பர் 31 ஆந் திகதி வரை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்தது. | ஆராய்ச்சி நிறுவனத்தை அமைப்பதற்கு எண்ணப்பட்ட சட்டமூலம் சட்டவரைஞர் திணைக்களத்தால் மீளாய்வு செய்யப்பட்டு இறுதி அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. எண்ணப்பட்ட சட்ட மூலத்தின் இறுதி அறிக்கை பரிந்துரைக்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கும் நிதி அமைச்சிற்கும் அனுப்பப்பட்டுள்ளது. | ஆராய்ச்சி நிறுவனத்தை நியதிச்சட்ட நிறுவனமாக ஆக்குவதன் மூலம் இலங்கை எதிர்நோக்கும் பிரதான இயற்கை அனர்த்தமாகிய மண்சரிவு அபாயத்தைக் குறைப்பதற்கு ஆராய்ச்சி நிறுவனத்தின் பங்களிப்பு முறையாக அமுலாக்கப்பட ஏதுவாகும். ஆகவே, சட்டமூலத்தின் வரைவு விரைவாக ஏற்றுக் கொள்ளப் படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) இரத்தினபுரி, கேகாலை, கண்டி ஆகிய இடங்களில் அமைந்துள்ள ஆராய்ச்சி நிறுவனத்தின் மாவட்ட அலுவலகங்கள் நடாத்தப்படும் | மாவட்ட அலுவலகங்களுக்குக் கட்டிடங்கள் வாடகைக்குப் பெறப்படும்போது நிர்வாகத் தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கி | மேலதிகச் செலவைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| கட்டிடங்களில் அந்த அலுவலகங்களுக்குத் தேவைக்குமதிகமாக இட வசதி உள்ளபோதும், அதனைக் கருத்திற் கொள்ளாது அந்த மாவட்டங்களில் செயற்திட்ட அலுவலகங்களை நடாத்துவதற்கு வேறு கட்டிடங்கள் வாடகைக்குப் பெறப்பட்டிருந்தன. அதன் பொருட்டு மீளாய்வாண்டில் செலவாகிய தொகை ரூபா 1.16 மில்லியன் ஆகும். | நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. செயற்திட்ட அலுவலகங்களுக்குக் கட்டிடங்களை வாடகைக்குப் பெறும்போது வேலைத்தளங்களை அண்மித்து இருத்தல் மற்றும் உத்தியோகத்தர்களுக்குத் தங்குமிட வசதிகளை அளித்தல் என்பவற்றுக்குக் கவனம் செலுத்தப்பட்டது. மீளாய்வாண்டில் மாவட்ட அலுவலகங்களில் செயற்திட்ட அலுவலகங்களை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |

## 3.2 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கண்டி மாவட்டத்தில் தொலுவ பிரதேச செயலகப் பிரிவில் ஸ்டேன்லி பேர்க்வத்தையில் மண்சரிவைக் குறைப்பதற்கான செயற்திட்ட அமுலாக்க நடவடிக்கைகள் வீதி வசதியின்மை காரணமாக இரத்துச் செய்யப்பட்டு கடுகண்ணாவை தமிழ் வித்தியாலய மண்சரிவுக் குறைப்புச் செயற்திட்டம் தெரிவு செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய, முக்கியமான செயற்திட்டங்களைத் தெரிவு செய்வது கைவிடப்பட்டு வீதி வசதி உள்ள இடங்களில் மண்சரிவு அபாயத்தைக் குறைப்பதற்கான செயற்திட்டங்கள் அமுலாக்கப்படுவது அவதானிக்கப்பட்டது. | வீதி வசதியின்மை நிலவுகையில் கேள்விகள் கோரப்பட்டபோதும், தெரிவு செய்யப்படக்கூடிய கேள்வியாளர்கள் முன்வராததும் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் அதிக விலைவாய்ந்தனவாக இருப்பதும் எமது அனுபவமாகும். மேலும், அவ்வாறான சந்தர்ப்பங்களில் குறைந்த விலையைச் சமர்ப்பிக்கும் கேள்வியாளர்கள் இடை நடுவே கைவிட்டுச் செல்லும் சந்தர்ப்பங்களும் உள்ளன. கடுகண்ணாவை தமிழ் வித்தியாலயக் கட்டிடத்தின் ஆபத்தான நிலைமை காரணமாகவும் அங்கு கல்வி கற்கும் மாணாக்கருக்கு ஏற்படக்கூடிய ஆபத்தைக் கருத்திற் கொண்டும் அதன் பொருட்டு பெறப்பட்ட கோரிக்கைகளையும் | முன்னுரிமைக்கேற்ப மண் சரிவைக் குறைப்பதற்காக செயற்திட்டங்களை அமுலாக்குவதன் மூலம் இடர் ஏற்படக்கூடிய ஆபத்தைக் குறைத்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கவனத்திற் கொண்டு கடுகண்ணாவை தமிழ் வித்தியாலயத்தில் ஏற்படக்கூடிய மண்சரவு அபாயம் தெரிவுக்குள்ளானது. | |
| (ஆ) | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடங்காத கண்டி மாவட்டத்தின் கெந்தவ, தர்மராஜ பிரிவென மற்றும் டீன்சைட் மண் சரிவு அபாயக் குறைப்புச் செயற்திட்டங்கள் 03 இற்காக ரூபா 8.35 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. | இப் பகுதிகள் மூலத் திட்டங்களில் உள்ளடக்கப்பட்டிருந்தன. அச்சந்தர்ப்பத்தில் தொழில்நுட்ப அறிவு மற்றும் அனுபவம் உள்ள தரப்பினர் இல்லாதிருந்தமையால் இப்பகுதிகளை பின்னர் செய்யலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய, குறிப்பிட்ட பணிகள் இவ்வாண்டின் போது நடைபெற்றன. தர்மராஜ பிரிவெனவில் நிலவும் மண்சரிவு அபாய நிலைமை தொடர்பான மாவட்டச் செயலாளரது கோரிக்கைக்கு ஏற்ப இச்செயற்திட்டம் நடைபெற்றது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தைத் தயாரிக்கையில் முன்னுரிமைச் சந்தர்ப்பங்கள் இனங் காணப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 குறைவான நிதியப் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| சமுதாய மூல இடர்களைக் குறைப்பதற்கான நிகழ்ச்சித்திட்டத்தை அமுலாக்குவதற்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் ஆராய்ச்சி நிறுவனம் பெற்றிருந்த தொகை ரூபா 11.02 மில்லியன் ஆகும். 2016 ஆம் ஆண்டின்போது ரூபா 6.00 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எஞ்சிய ரூபா 5.02 மில்லியன் 2018 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் பயன்படுத்தப்படாதிருந்தது. | சமுதாயமூல இடர்களைக் குறைப்பதற்காக எதிர்காலத்தில் இதனைச் செலவிட எதிர்பார்க்கின்றோம். | ஏற்பாடு செய்யப்பட்ட நிதிக்குரிய பணிகளை நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.4 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளில் தாமதம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| களுத்துறை மாவட்டத்தின் அதலே மஹா வித்தியாலய மண்சரிவு அபாயக் குறைப்பு வேலைகள் 150 நாட்களுக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டுமெனத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆரம்பிக்கப்பட்டு 82 நாட்களாகியும் 2018 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் அதன் செயல் முன்னேற்றம் 30 சதவீதம் மாத்திரமே ஆகவிருந்தது. | அதலே மஹா வித்தியாலய மண்சரிவு அபாயக் குறைப்புச் செயற்திட்டம் தற்போது ஏறக்குறைய 90 சதவீதம் நிறைவடைந்துள்ளது. எதிர்வரும் 02 மாதங்களுக்குள் முற்றாகப் பூர்த்தி செய்யப்பட்டு குறித்த தரப்பினரிடம் ஒப்படைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | குறித்த தினத்தில் செயற்திட்டத்தைப் பூர்த்தி செய்வதன் மூலம் மேலதிக கிரயம் ஏற்படுவதைக் குறைப்பதற்கும் இடர் அபாயங்களைக் குறைத்துக் கொள்வதற்குமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.5 பொருட் கொள்வனவு முகாமைத்துவம்**

ஆராய்ச்சி நிறுவனத்தின் புதிய அலுவலகம் மற்றும் ஆய்வுகூடக் கட்டிடம் சம்பந்தமான பொருட் கொள்வனவு நடவடிக்கைகள் தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஆராய்ச்சி நிறுவனத்தின் புதிய அலுவலகம் மற்றும் ஆய்வுகூக் கட்டிட நிர்மாண வேலை ஒப்பந்தத்திற்குரிய கால அவகாசம் 03 சந்தர்ப்பங்களில் நீடிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, 2017 டிசெம்பர் 21 ஆந் திகதியளவில் பூர்த்தியாக வேண்டிய நிர்மாணப் பணி நடவடிக்கைகள் 2018 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் முடிவடையாதிருந்தன. | நிர்மாணப் பணிகள் தாமதமாவதற்குக் காரணமாகிய சகல விடயங்களும் ஒப்பந்தகாரரின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டனவாகும். | (அ) உடன்படிக்கைக் காலத்திற்குள் ஒப்பந்தத்தை நிறைவு செய்ய வேண்டுமென ஒப்பந்தகாரரை ஊக்குவிக்க வேண்டும்.<br><br>(ஆ) ஒப்பந்தகாரரது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட விடயங்களைக் குறைப்பதன் மூலம் ஒப்பந்த நிர்வாக நடவடிக்கைகளை வினைத்திறனுடன் அமுலாக்குவதற்கு ஆராய்ச்சி நிறுவனம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஒப்பந்த உடன்படிக்கையின் 4.5 ஆம் பந்தியின் பிரகாரம் இடைக்காலக் கொடுப்பனவின் அதி குறைந்த தொகை ரூபா 12.5 மில்லியன் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதும், நடப்பாண்டில் 30 சந்தர்ப்பங்களில் ரூபா 95.74 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், அது அதி குறைந்த விலைப்பட்டியலில் குறிப்பிடப்பட்ட பெறுமதிக்கும் குறைவாகவே இருந்தது. சிவில் வேலைகளுக்குக் கொடுப்பனவு செய்யப்பட்ட தொகையில் ரூபா 38.31 மில்லியன் ஒப்பந்தகாரரின் பொருட்டு வெளிவாரி நிறுவனம் ஒன்றிற்குக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | நிர்மாண வேலைகளது முன்னேற்றத்தை அதிகரிப்பதற்கு தேவையானவாறு கட்டிடப் பொருட்கள் மற்றும் தொழிலாளர்கள் வேலைத் தளத்திற்கு வழங்கப்பட வேண்டும். இதன்பொருட்டு ஒப்பந்தகாரரது நிதி வளமானது திருப்திகரமான மட்டத்தில் இருக்க வேண்டும். அந்நோக்கத்துடன் விலைப்பட்டியல் அதி குறைந்த தொகைக்கும் குறைவாக இருந்த போதும், கொடுப்பனவிற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது மேலும், ஒப்பந்தகாரரது நிதி நெருக்கடி காரணமாக பிரதான வழங்குனரிடமிருந்து கொங்கிறீட் கம்பிகளும் செங்கற்களும் வேலைத்தளத்திற்கு வழங்கப்படுவதில் வசதியின்மை நிலவியது. ஆகவே, ஒப்பந்தகாரர் அந்நிறுவனத்துடன் கலந்துரையாடி எமது நிறுவனத்தினதும் இணக்கத்துடன் ஒப்பந்தகாரரின் விலைப்பட்டியலில் கழிவுகளை மேற்கொண்டு ஒப்பந்தகாரரின் வேண்டுகோளுக்கமைய அவ்வழங்குனர்களுக்கு நேரடியாகவே கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டன. | ஒப்பந்தகாரர் மேலதிக நிதிசார் இலாபத்தைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் தவிர்க்கப்பட வேண்டும். உப ஒப்பந்தகாரர்களுக்கு நேரடியாகவே பணம் வழங்குவதானது பிணையின்றி வழங்கப்படும் முற்பணமாவதால் அதன் மூலம் நிதிசார் அபாயம் அதிகரிக்கக்கூடும். ஆகவே, அவ்வாறான கொடுப்பனவுகள் தவிர்க்கப்பட வேண்டும். |
| (இ) | ஆராய்ச்சி நிறுவனத்தின் புதிய தலைமை அலுவலகக் கட்டிடம் மற்றும் ஆய்வுகூடக் கட்டிடம் என்பவற்றினது நிர்மாணப் பணி தாமதமடைந்ததால் | நிர்மாணப் பணி தாமதமாகியதால் இச் செலவினம் ஏற்பட்டது. தற்போது பிரதான பணிகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளன. கட்டிட | (i) மேலதிக செலவினத்தைக் கட்டுப்படுத்த வேண்டும்.<br>(ii) ஆராய்ச்சி |

| | | | |
|---|---|---|---|
| | நிறுவனத்தின் சில பிரிவுகளை நடாத்துவதற்கென வாடகைக்குப் பெறப்பட்ட கட்டிடத்திற்கு 2018 ஆம் ஆண்டில் ரூபா 3.73 மில்லியன் வரியாகச் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், நிர்மாணப் பணி மதியுரைச் சேவைகளை வழங்குவதற்கு ஆராய்ச்சி நிறுவன உத்தியோகத்தர் களுக்கு ரூபா 8.88 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | வேலையைப் பூர்த்தி செய்வது துரிதப்படுத்தப்பட்டுள்ளது | நிறுவனமே சிவில் நிர்மாணப் பணி மதியுரையை வழங்குவதன் மூலம் எதிர்பார்த்த கிரய இலாபம் பிரச்சினைக்கு ரியதாகியமை உறுதிப்படுத்தப் படுகின்றது. |
| (ஈ) | புதிய அலுவலக ஆய்வுகூடக் கட்டிட மிக்சாரம் மற்றும் குழாய் நீர் பணிகளுக்கு வேறொரு ஒப்பந்தகாரர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். உடன்படிக்கைப் பிரகாரம் 2018 மே 29 ஆந் திகதியளவில் அப்பணி முடிவடைய வேண்டுமாயினும், கட்டிட நிர்மாணப் பணிக்குப் பொறுப்பான ஒப்பந்தகாரரது தாமதத்தால் அப்பணியை நிறைவேற்ற முடியவில்லை. மேலும், மீளாய்வாண்டின்போது இப்பணிக்கு ரூபா 1.89 மில்லியன் இடைக்கால விலைப்பட்டியல் மாத்திரமே சமர்ப்பிக்கப் பட்டிருந்ததுடன், வழங்கப்பட்ட முற்பணத்தில் தீர்வு செய்யப்படாத ரூபா 2.69 மில்லியன் 2018 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் ஓராண்டிற்கு மேலாக அந்த ஒப்பந்தகாரர் வசமிருந்தது. | மேற்படி காரணத்தால் கட்டிடத்தின் பிரதான அமைப்புக்கான நிர்மாணப் பணி தாமதமாகியமையால் மின்சார, நீர் பணிகளும் தாமதமடைந்து உள்ளன. நீர்க்குழாய் பணிகளில் ஈடுபட்டுள்ள ஒப்பந்தகாரரின் கூறு விலைகளில் மாற்றமின்றி கூறுவிலை வேறுபாடுகள் மாத்திரமே கருத்திற் கொள்ளப்பட்டன. மேலும், முற்பணக் கொடுப்பனவைத் தீர்வு செய்வது உடன்படிக்கைப் பிரகாரம் நடைபெற்றுள்ளது. இதற்கமைய பூர்த்தி செய்த வேலைக்குரிய விலைப்பட்டியலுக்கே பணம் வழங்கப்பட்டது. | உடன்படிக்கைப் பிரகாரம் குறித்த தினத்தில் பணியை நிறைவேற்றுவதன் மூலம் கிரயக் கட்டுப்பாட்டை வினைத்திறனுடன் ஆற்றல் அவசியமாகும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | புதிய அலுவலகக் கட்டிட நிர்மாணப் பணிக்கு 2018 ஆம் ஆண்டின் இறுதியளவில் பொதுத் திறைசேரியிலிருந்து ரூபா 450 மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது. எனினும், 2018 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் அதில் ரூபா 206.25 மில்லியன் மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது. அதற்கமைய, விடுவிக்கப்பட்ட நிதியில் ரூபா 243.75 மில்லியன் குறித்த பணிக்குப் பயன்படுத்தப்படாது ஆராய்ச்சி நிறுவனத்தின் வங்கிக் கணக்குகளில் இருந்தமை அவதானிக்கப்பட்டது. | இக்கட்டிடத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ஏறக்குறைய ரூபா 600 மில்லியன் ஆகும். பொதுத்திறைசேரியிட மிருந்து ரூபா 450 மில்லியன் பெறப்பட்டது. எஞ்சிய தொகை நிறுவனத்தால் செலவிடப்படும். மேலும், தற்சமயம் ஏறக்குறைய ரூபா 587 மில்லியனுக்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளதுடன் அவற்றினது செயல் முன்னேற்றத்திற்கமைய விலைப்பட்டியல்களுக்கு இத்தொகை செலவிடப்படும். | ஒப்பந்த நிர்வாகத்தை திறம்படச் செய்ற்படுத்துவதன் மூலம் வினைத்திறனுடனான பயன்பாட்டிற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.6. ஒப்பந்த நிர்வாகத்தில் உள்ள குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| தானாக இயங்கும் 50 மழை மானிகளை நிறுவுவதற்கு 2017 ஆம் ஆண்டில் ஒப்பந்தம் ஒன்று வழங்கப்பட்டிருந்தது. அந்நிறுவனம் உடன்படிக்கைக் காலத்தினுள் பணியை நிறைவேற்றியிருக்கவில்லை. எனினும், அதனைக் கருத்திற் கொள்ளாது மீண்டும் 2018 ஆம் ஆண்டில் 30 மழை மானிகளை நிறுவும் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. | 2018 ஆம் ஆண்டிற்கான கேள்விகளைப் பகுப்பாய்வு செய்யும் சந்தர்ப்பத்தில் குறித்த நிறுவனம் 2017 ஆம் ஆண்டிற்குரிய தானாக இயங்கும் மழை மானிகளை முறையாக நிறுவுவதை நிறைவேற்றியிருந்தது. | குறித்த தினத்தில் உரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதன் மூலம் எதிர்பார்த்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். |